**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ. எண்.70** **நாள். 08.04.2026**

**சென்னை மாவட்டத்தில் 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வீட்டிலேயே வாக்களிப்பது தொடர்பான பணிகள் மேற்கொள்ளும் வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் நுண் பார்வையாளர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்-2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்குச்சாவடிக்கு நேரடியாக சென்று வாக்களிக்க இயலாத 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு படிவம்-12D வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்பட்டது.

அவ்வாறாக, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 85 வயதிற்கு மேற்பட்ட 23,415 மூத்த வாக்காளர்கள் மற்றும் 12,501 மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் என மொத்தம் 35,916 வாக்காளர்களுக்கு படிவம் 12D வழங்கப்பட்டு, அதில் வீட்டிலேயே வாக்களிக்க விருப்பம் தெரிவித்த 8,947 வாக்காளர்களுக்கு வீட்டிலேயே வாக்குப்பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த வாக்காளர்களுக்கான வாக்குப்பதிவு பணியில் ஈடுபடும் குழுவில் வாக்குப்பதிவு அலுவலர் 1 மற்றும் 2, காவலர், வீடியோ ஒளிப்பதிவாளர், நுண் பார்வையாளர் இடம் பெற்றிருப்பார்கள். 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 96 வாக்குப்பதிவு குழுக்கள் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இந்த வாக்குப்பதிவு குழுக்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர்/ ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.04.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

தபால் வாக்குப்பதிவு பணிகளில் ஈடுபடும் வாக்குப்பதிவு அலுவலர்கள் குழுவானது சம்பந்தப்பட்ட தபால் வாக்கு செலுத்த உள்ள வாக்காளரின் முகவரிக்கு வருகைபுரியும் தேதி மற்றும் நேரம் ஆகியவை வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி அலுவலர் மூலமாக தெரியப்படுத்த வேண்டும்.

மேலும், வாக்காளருக்கு தபால் வாக்குப்பதிவு செய்யும் முறையினை தெளிவாக அலுவலர்கள் விளக்க வேண்டும். மேலும், வாக்காளர் தன்னுடைய வாக்கினை பதிவு செய்யும் போது அவர் தன் சுயவிருப்பப்படி வாக்களிப்பதையும், வாக்களிப்பதின் இரகசிய தன்மையினை பேணுதல் ஆகியவற்றை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

வாக்காளர் தன்னுடைய தபால் வாக்கினை பதிவு செய்த பின்னர் தன்னுடைய தபால் வாக்குச்சீட்டினை முறையாக மூடி அலுவலர்களால் கொண்டு வரப்பட்ட சீல் வைக்கப்பட்ட பெட்டகத்தில் செலுத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் பெட்டியில் பெறப்பட்ட தபால் வாக்குச்சீட்டுகளின் விவரங்களை பதிவேட்டில் பதிவு செய்து, தேர்தல் நடத்தும் அலுவலர்களின் கட்டுப்பாட்டில் பாதுகாப்பாக வைக்க வேண்டும். தினமும் பெறப்படும் தபால் வாக்குகள் விவரம் இணைய வழியாக தலைமை தேர்தல் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படும்.

எனவே, 85 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான பணியில் ஈடுபடும் அலுவலர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி சிறப்புடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வாக்குப்பதிவு அலுவலர்கள் மற்றும் நுண் பார்வையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**